முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

முன்னிலை : திரு. V. பத்மநாபன், M.A. M.L., D.H.,
முதன்மை மாவட்ட நீதிபதி.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள், திங்கட்கிழமை.

அசல் வழக்கு எண்.4/2022
(Filing No.OS/2/2022)
(CNR No.TNPB01-000002-2022)

1. மகேஸ்வரி, 37/2022,
க/பெ. (லேட்) நடராஜமூர்த்தி.

2. இளவர் கவிகுமார், 12/2022,
த/பெ. (லேட்) நடராஜமூர்த்தி,

3. இளவர் ஹரிணி, 10/2022,
த/பெ. (லேட்) நடராஜமூர்த்தி,
மேற்படி 2 மற்றும் 3 இளவர்களின் பாதுகாவலரும் மற்றும்
தாயாருமான 1ஆம் வாதி மூலமாக,
மேற்படியார்கள் அனைவரும்
பெரம்பலூர் வட்டம் மற்றும் மாவட்டம். .... வாதிகள்.

–எதிர்–

1. ராஜு, 80/2022,
த/பெ. (லேட்) சிதம்பரம்,
புதிய மதனகோபாலபுரம்,
பெரம்பலூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

2. செல்லம், 40/2022,
க/பெ. மணி, த/பெ.ராஜு,
வடக்குமாதவி கிராமம்,
பெரம்பலூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

3. சீதாலட்சுமி, 38/2022,
க/பெ. தேவதாஸ், த/பெ.ராஜு,
வெங்கடாஜலபதி நகர்,
பெரம்பலூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.30 19:12:15 +0530

4. சுபாராணி, 35/2022,
   க/பெ. உமாசங்கர், த/பெ.ராஜு,
   புதிய மதனகோபாலபுரம்,
   பெரம்பலூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

5. ஜெயலட்சுமி, 33/2022,
   க/பெ. கிருஷ்ணமூர்த்தி,
   செங்குணம் கிராமம்,
   பெரம்பலூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

6. சார்பதிவாளர்,
   சார்பதிவாளர் அலுவலகம்,
   பெரம்பலூர். .... பிரதிவாதிகள்.

இவ்வழக்கில் வாதிகளுக்காக வழக்கறிஞர் திருவாளர்கள்.சி.கணேசன், எஸ்.அருணன் மற்றும் எம்.அரவிந்த் அவர்கள் ஆஜராகியும், 1 ஆம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திருவாளர்கள்.டி.ஏசுதாஸ்பால் மற்றும் டி.அருண்ஜெனிரா, அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்காக திருவாளர்கள்.இ.வள்ளுவன் நம்பி, ஆர்.பன்னீர்செல்வம், கே.பெரியசாமி மற்றும் பி.இளமைச்செல்வன், அவர்கள் ஆஜராகியும், 5 ஆம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திருவாளர்கள்.சி.வேலுசாமி, பி.வடிவேல் மற்றும் எம்.அஜித்குமார், அவர்கள் ஆஜராகியும், 6ஆம் பிரதிவாதிக்காக அரசு தரப்பு வழக்கறிஞர் திருமதி.ஆர்.சந்தானலெட்சுமி, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இறுதியாக 23.03.2026 அன்று என் முன்பாக வரப்பெற்று இதுநாள்வரை பரிசீலனையில் இருந்து, இந்நீதிமன்றத்தில் பின்வருமாறு வழங்கப்படும்

## தீர்ப்புரை

1. தாவா சொத்துக்களை நள இளப்பம் சரிகட்டி 5 சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் 1 பாகத்தை வாதிகளுக்கு, 1 முதல் 5 பிரதிவாதிகள் நீதிமன்றம் குறிப்பிடும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பிரித்துக்கொடுக்க ஒரு முதல்நிலை தீர்ப்பாணைக்கு உத்திரவிட்டும், தவறும் பட்சத்தில் முதல்நிலை தீர்ப்பாணையை அனுசரித்து நீதிமன்றம் மூலம் வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து ஆணையர் நில அளவையர் உதவியுடன் தாவா சொத்துக்களை

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:12:20 +0530

பார்வையிட்டு அளந்து நளஇளப்பம் சரிகட்டி அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்வதன்மூலம் தாவா சொத்துக்களில் 1/5 பாகத்தை வாதிகளுக்கு பிரித்து கொடுக்க இறுதிநிலை தீர்ப்பாணை வழங்க வேண்டியும்,

2. தாவா சொத்துக்கள் பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகள் வீண் விவகாரநோக்கில் ஏதேனும் ஆவணம் ஏற்படுத்தி அவைகளை 6–ம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்ய முயன்றால் அவைகளை 6–ம் பிரதிவாதி பதிவு செய்யாமல் இருக்க 6–ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவேண்டியும் ,

3. செலவுத்தொகை கோரியும் வாதிகள் தரப்பில் இவ்வழக்கு தாக்கல்.

2. <u>வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்</u>:

1ஆம் பிரதிவாதிக்கு, 1ஆம் வாதியின் கணவரும், 2, 3 வாதிகளின் தந்தையுமான நடராஜமூர்த்தி மகன். அதேபோல் 1ஆம் பிரதிவாதிக்கு, 2 முதல் 4 பிரதிவாதிகள் மகள்கள். 1ஆம் பிரதிவாதியின் மனைவி நல்லம்மாள் கடந்த 15.04.2013 ஆம் தேதி இறந்து விட்டார். 1ஆம் பிரதிவாதியின் மகனும், கடந்த 01.06.2018 ஆம் தேதி இறந்து விட்டார். 1ஆம் பிரதிவாதிக்கு, இறந்துபோன மகன் நடராஜமூர்த்தியின் வாரிசுகளான வாதிகள் மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் மட்டுமே சட்டரீதியான வாரிசுகள். இவர்களைத்தவிர வேறு யாரும் வாரிசுகள் இல்லை.

பெரம்பலூர் தெற்கு கிராம சர்வே எண்.554/3 ஏக்.1.70 க்கு UDR சர்வே எண்.220/3 ஹெக்.0.69.0 ஏர்ஸ், சர்வே எண்.554/6B ஏக்.0.54 செண்ட் மற்றும் சர்வே எண்.554/6 ஏக்.1.96 க்கு UDR சர்வே எண்.220/6D ஹெக்.0.79.0 ஏர்ஸ் நிலங்களும், தாவா 1வது அயிட்ட சொத்தான வீடும் பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்கள். மேற்படி பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்களான நிலங்களை கடந்த 2005 மற்றும் 2006–ல் விற்பனை செய்து, அதிலிருந்து கிடைக்கப்பெற்ற தொகையை கொண்டு தாவா 1– வது இலக்க சொத்தில் இருந்த கூரைவீட்டை மாற்றி மெத்தைவீடு கடந்த 2006–ல் கட்டப்பட்டது, அந்த 1–வது அயிட்ட சொத்தில் வாதிகள் குடியிருந்து வருகிறார்கள். மேலும் 1ஆம் பிரதிவாதி பெயரில், தாவா 2–வது அயிட்ட சொத்தை கடந்த 04.05.2006

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:12:25 +0530

ஆம் தேதியும், 3–வது அயிட்ட சொத்தை கடந்த 14.08.2006 ஆம் தேதியும், 4–வது அயிட்ட சொத்தை 1ஆம் பிரதிவாதியின் மகள்களான 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் கடந்த 18.09.2006ஆம் தேதி மூன்று கிரைய பத்திரங்கள் மூலமும் கிரையம் பெறப்பட்ட கிரைய சொத்துக்கள். கிரையம் பெறப்பட்ட 2வது அயிட்ட சொத்தில் ஒரு மெத்தை வீடு அமைந்துள்ளது. அது கிரையம் பெற்ற நாள்முதல் வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. அதேபோல் 3–வது அயிட்ட சொத்தில் நான்கு மெத்தை வீடுகள் அமைந்துள்ளது. அந்த நான்கு மெத்தை வீடுகளில் கீழ்தளத்தில் உள்ள இரண்டு வீடுகளில் கீழ்புறம் உள்ள வீட்டில் 1ஆம் பிரதிவாதியும், மேல்புறம் உள்ள வீட்டில் 4ஆம் பிரதிவாதியும் குடியிருந்து வருகிறார்கள். மேலும் மேல்தளத்தில் உள்ள இரண்டு வீடுகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அதேபோல் 4–வது அயிட்ட சொத்தில் மூன்று மெத்தை வீடுகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளும் 1–ம் பிரதிவாதியின் கட்டுப்பாட்டிலேயே நாளதுவரை இருந்து, அனைத்து வீடுகளின் வாடகையையும் பெற்று அவரே நிர்வாகம் செய்து வருகிறார்.

1ஆம் பிரதிவாதியும், அவரது வாரிசுகளும் பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்களான நிலங்களை கடந்த 2005 மற்றும் 2006–ல் விற்பனை செய்து அதிலிருந்து கிடைக்கப்பெற்ற தொகையை கொண்டு, மேலும் சில சொத்துக்களை 1ஆம் பிரதிவாதி அவரது மகள்களான 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் கிரையம் வாங்கி வைத்துள்ளார். அவைகளைப் பொறுத்த சரியான மற்றும் முழுமையான தகவல் தற்போதுவரை வாதிகளுக்கு கிடைக்கவில்லை. அதனால் அவைகளை பொறுத்த சரியான மற்றும் முழுமையான தகவல் கிடைத்ததும் அவைகள் இவ்வழக்கில் பின்னிட்டு சேர்த்துக்கொள்ள வாதிகள் தங்களது உரிமையை இதன்மூலம் தக்கவைத்துக்கொள்கிறார்கள்.

பொதுக்குடும்ப பூர்வீக சொத்தான பெரம்பலூர் தெற்கு கிராம சர்வே எண்.220/3 ஹெக்.0.69.0 ஏர்ஸ்–க்கு ஏக்.1.70–ல் ஹெக்.0.28.5–க்கு ஏக்.0.70 செண்ட் நிலத்தை 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு, 1–ம் பிரதிவாதி கடந்த 15.03.2012–ல் ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் கொடுத்துள்ளார். அதேபோல் மேற்படி சொத்தில் உள்ள மீதியை அதாவது ஹெக்.0.40.5–க்கு ஏக்.1.00 செண்ட் நிலத்தை, 1–ம்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.30 19:12:29 +0530

பிரதிவாதியின் மகன் நடராஜமூர்த்தி உடல்நலக்குறைவில் இருந்து வந்ததால், அவரது பேரனான இளவர் 2–ம் வாதியின் பெயரில், நடராஜமூர்த்தி–யை கார்டியனாக நியமித்து கடந்த 16.03.2012–ல் ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி தான செட்டில்மெண்ட்டில் கண்ட சொத்துக்களை 2 முதல் 4 பிரதிவாதிகள் விற்பனை செய்துள்ளதோடு மட்டுமல்லாது, இளவர் 2–ம் வாதிக்கு கிடைத்த சொத்தையும், 1ஆம் வாதியின் கணவர் நடராஜமூர்த்தி தொடர்ந்து உடல்நலக்குறைவில் இருந்து வந்ததால், அதனை விற்பனை செய்து பெருமளவில் மருத்துவ செலவு செய்தும், பலன் அளிக்காமல் நடராஜமூர்த்தி கடந்த 01.06.2018–ல் இறந்து விட்டார்.

1–ம் வாதியின் கணவரும், 2, 3 வாதிகளின் தகப்பனாரான நடராஜமூர்த்தி இறந்ததற்கு பின்னிட்டு குடும்பத்தில் ஒற்றுமை குறைவு ஏற்பட்டுள்ளது. இதனால் 1ஆம் பிரதிவாதியின் பெயரில், கிரையம் பெற்ற 3–வது அயிட்ட சொத்தில் உள்ள ஒரு மெத்தை விட்டில், 1–ம் பிரதிவாதி தற்போது வசித்து வருகிறார். மேலும் 1–ம் பிரதிவாதி தற்போது வயோதிகத்தின் காரணமாக உடல்நலக் குறைவில் உள்ளார். இதனை மகள்களான 2 முதல் 4 பிரதிவாதிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தாவா 4–வது அயிட்ட சொத்திற்கான, கிரையப்பத்திரம் 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் உள்ளதை அனுகூலமாக வைத்துக்கொண்டு, மேற்படி 4–வது அயிட்ட சொத்தை 2 முதல் 4 பிரதிவாதிகள், 5–ம் பிரதிவாதிக்கு கடந்த 07.09.2018–ம் தேதி விற்பனை செய்துள்ளார்கள். அதேபோல் தாவா 2–வது அயிட்ட சொத்தை கடந்த 02.12.2019–ல் 1ஆம் பிரதிவாதியிடமிருந்து, 2 முதல் 4 பிரதிவாதிகள் மோசடியாக ஏமாற்றி தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதி வாங்கியுள்ளார்கள். மேற்படி ஆவணங்கள் சட்டப்படி செல்லாது. மேலும் மேற்படி ஆவணங்கள் தாவா சொத்துக்களில் இந்த வாதிகளின் பாக உரிமையை பொறுத்து எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. மேற்படி ஆவணங்கள் ஏற்பட்ட விபரம் 1ஆம் வாதிக்கு தெரியவந்தவுடன், மேற்படி ஆவணங்களுக்கு 2021 நவம்பர் மாதம் நகல் எடுத்து பார்த்த வகையில் தற்போது இந்த வாதிகளுக்கு தெரிய வந்துள்ளது.

மேலும் மற்ற சொத்துக்களையும், 1ஆம் பிரதிவாதியிடமிருந்து, 2 முதல் 4

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:12:33 +0530

பிரதிவாதிகள் ஏமாற்றி எழுதிவாங்க முயன்று வருகிறார்கள். தாவா 2–வது அயிட்ட சொத்தை பொறுத்து, 1ஆம் பிரதிவாதியிடமிருந்து, 2முதல் 4 பிரதிவாதிகள் ஏமாற்றி மோசடி செய்து ஏற்படுத்தியுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்தை அனுகூலமாக வைத்துக்கொண்டு, தாவா 2வது அயிட்ட சொத்தை வேறு நபர்களுக்கு விற்கிரையம், வில்லங்கம் போன்ற பாராதினங்கள் செய்யவும், 2 முதல் 4 பிரதிவாதிகள் தொடர்ந்து முயன்று வருகிறார்கள்.2 முதல் 4 பிரதிவாதிகளது செயல்கள் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் முரணானது. தாவா சொத்துக்கள் அனைத்தும் மேற்சொன்ன பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்கள் மற்றும் பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்களை விற்று அதிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தை கொண்டு கிரையம் பெறப்பட்ட கிரைய சொத்துக்கள் என்பதால், இவையும் பூர்வீக பொதுக்குடும்ப சொத்துக்கள். அதனால் தாவா சொத்துக்களுக்கான கிரைய ஆவணங்கள் இந்த 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் இருந்தாலும், அவைகள் 1 முதல் 4 பிரதிவாதிகளின் தனிப்பட்ட சொத்துக்கள் அல்ல. அதனால் தாவா சொத்துக்களில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எவ்வாறு பாகஉரிமை உள்ளதோ, அதேபோல் 1–ம் வாதியின் கணவரும், 2 மற்றும் 3 வாதிகளின் தந்தையுமான இறந்துபோன நடராஜமூர்த்திக்கும் சரிசம 1/5 பாக உரிமை சட்டரீதியாக உள்ளது. நடராஜமூர்த்தி இறந்துவிட்டதால் அவருக்கு உரிய 1/5 பாகஉரிமையானது அவரது வாரிசுகளான வாதிகளுக்கு சட்டரீதியாக கிடைக்கக்கூடியது. அதனை மறுப்பதற்கு இந்த 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எவ்விதத்திலும், யாதொரு உரிமையும் சட்டரீதியாக கிடையாது.

1–ம் பிரதிவாதி அவருடைய மகனான நடராஜமூர்த்தியுடன் சேர்ந்து பூர்வீக சொத்துக்களை விற்பனை செய்த தொகையை கொண்டு, 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு நகை, பணம் என போதிய சீர்வரிசைகளும் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இறந்துபோன நடராஜமூர்த்திக்கு என்று கிரையம் பெறப்பட்ட தாவா 2, 3 அயிட்ட சொத்துக்களுக்கான கிரைய ஆவணங்கள் 1–ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளதை அனுகூலமாக வைத்துக்கொண்டு, தாவா 2–வது அயிட்ட சொத்தை, 1ம் பிரதிவாதியிடமிருந்து, 2 முதல் 4 பிரதிவாதிகள் கடந்த 02.12.2019–ல் தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் ஏமாற்றி எழுதிவாங்கியுள்ளார்கள். இதன் விபரம்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:12:37 +0530

வாதிகளுக்கு தெரியவந்தவுடன், இதுதொடர்பாக வாதிகள் நேரிலும், ஊரில் முக்கியமான உறவுக்காரர்கள் மூலமும் மற்றும் வழக்கறிஞர் மூலம் 29.11.2021–ல் அறிவிப்பு கொடுத்து கேட்டுள்ள நிலையில், 1 முதல் 4 பிரதிவாதிகள் எவ்விதமான பதிலும் வாதிகளிடமும், உறவுக்காரரிடமும் கூறவில்லை. மேலும் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டுள்ள நிலையில், மேற்படி அறிவிப்பிற்கும் நாளதுவரை யாதொரு பதில் அறிவிப்பும் கொடுக்காமல் தொடர்ந்து கேவியட்மனு தாக்கல் செய்து விட்டு, தாவா சொத்துக்களை மேற்கொண்டு விற்கிரையம், வில்லங்கம் போன்ற பாராதினங்கள் செய்யவும், 2 முதல் 5 பிரதிவாதிகள் தொடர்ந்து அவசரகதியில் முயன்று வருகிறார்கள். அவ்வாறான 2 முதல் 6 பிரதிவாதிகளின் செயல்கள் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் முரணானது.

2 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு உரிய பாக உரிமையை எவ்வகையிலேனும் ஏமாற்ற கெட்ட எண்ணங்கொண்டு தாவா சொத்துக்களுக்கான பட்டா மற்றும் கிரைய ஆவணங்கள் 1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் உள்ளதை அனுகூலமாக வைத்துக்கொண்ட தாவா சொத்துக்களை பொறுத்து மேற்கொண்டு விற்கிரையம், வில்லங்கம் போன்ற பராதினங்கள் செய்யவும் தொடர்ந்து கடந்த 2021 நவம்பர் மாதம் முதல் துரிதமாக முயன்று வருவதால் வாதிகள் வேறு வழியின்றி தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு உரிய 1/5 பாகத்தினை நீதிமன்றம் மூலம் பிரித்துக்கொடுக்க கேட்டு வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுட்டுள்ளது. தாவா சொத்துக்கள் பொறுத்து, 1 முதல் 5 பிரதிவாதிகள் வீண் விவகாரநோக்கில் மேற்கொண்டு ஏதேனும் ஆவணம் ஏற்படுத்தி அவைகளை 6ஆம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்ய முயன்றால், அவைகளை 6–ம் பிரதிவாதி பதிவு செய்யாமல் இருக்க 6ஆம் பிரதிவாதி அவசியமான தரப்பினர் என்ற முறையில் தரப்பாளராக சேர்க்கப்பட்டு, 6–ம் பிரதிவாதிக்கு எதிராகவும் இவ்வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

1–ம் பிரதிவாதி பூர்வீக சொத்துக்களை விற்பனை செய்த வகையிலும், விற்பனை செய்த தொகையை கொண்டு கிரையம் பெற்ற தாவா 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களை 2006–ல் இருந்து வாடகைக்கு விட்டு, வாடகை பெற்று வரும்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:12:41 +0530

வகையிலும், 1–ம் பிரதிவாதியிடம் அதிகமான தொகை கையிருப்பு உள்ளவைகளை அபகரிக்க திட்டமிட்டுள்ள 2 முதல் 4 பிரதிவாதிகள் செயல் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் முரணானது. எனவே வழக்கு.

3. 1ஆம் பிரதிவாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:

தாவா 1வது அயிட்ட சொத்து, பூர்வீக சொத்து என்பதில் 1ம் வாதிக்கு எவ்வித மாற்று கருத்தும் இல்லை. பெரம்பலூர் தெற்கு கிராம் சர்வே எண். 554/3ல் ஏக். 1.70க்கு யு.டீ.ஆர் சாவே எண்: 220/3 ஹெக் 0.69.0 ஏர்ஸ், சர்வே எண். 554/6B ஏக். 0.54 சென்ட் மற்றும் சர்வே எண். 554/6 ஏக்.1.96, யு.டீ.ஆர் சர்வே எண். 220/6Dல் ஏக்.0.79.0 ஏர்ஸ் நிலங்களும் தாவா 2, 3 அயிட்ட சொத்துக்களும் 1ம் பிரதிவாதி கிரையத்திற்கு பெற்ற சுய சம்பாத்திய சொத்துக்கள். மேற்படி நிலங்களில் தாவா 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்கள் தவிர மீதமுள்ள மொத்தம் ஏக்.4.20 சென்டில் ஏக்.2.50 சென்ட் நிலத்தை 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் 1ஆம் வாதியின் கணவரும் மற்றும் 2, 3 வாதிகளின் தந்தையுமான நடராஜமூர்த்தி ஆகியோர்கள் சேர்ந்து சில நபர்களுக்கு 2005 மற்றும் 2006ஆம் ஆண்டு கிரையம் செய்துள்ளார்கள். அவ்வாறு விற்கிரையம் செய்த வகையில் கிடைத்த தொகையில் ரூ.35 லட்சம் செலவு செய்து, தாவா 1வது அயிட்ட சொத்தில் இருந்த கூரையை அகற்றி RCC கெட்டி மெத்தை வீட்டை 1ஆம் பிரதிவாதி கட்டியுள்ளார். பின்னிட்டு 1ஆம் வாதிக்கும். 1ஆம் பிரதிவாதியின் மகன் நடராஜமூர்த்திக்கும் ரூ.5 லட்சம் செலவில் திருமணம் செய்து வைத்துள்ளார். 1ஆம் வாதியின் கணவரான நடராஜமூர்த்தி பெயரில் ரூ.2,00,000/– நிரந்தர வைப்பு தொகையாக வெங்கடேசபுரம் பெரம்பலூர் எஸ்பிஐ கிளையில் வைப்பீடு செய்யப்பட்டது. மேலும் ரூ.5,00,000/–த்தை மேற்படி நடராஜமூர்த்தியிடம் கை செலவுக்காகவும் கொடுக்கப்பட்டது. மேலும், பெரம்பலூர் LIC கிளையில் வருடம் ரூ.5,000/– என்ற வகையில் இன்சூரன்ஸ் பிரீமியம் 1ம் பிரதிவாதியால் நடராஜமூர்த்தி பெயரில் செலுத்தப்பட்டு வந்தது. 4ம் பிரதிவாதிக்கு ரூ.3 லட்சம் செலவு செய்து 1ம் பிரதிவாதி திருமணம் செய்து வைத்துள்ளார். அதன் பின்னிட்டு நடராஜமூர்த்தியிடம் 1ம்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:12:45 +0530

பிரதிவாதி கைசெலவுக்கு என கொடுத்த ரூ.5,00,000/—த்தை ஊதாரித்தனமாக செலவு செய்து மேற்படி ரூ.5,00,000/—த்தையும் முழுவதுமாக அழித்துவிட்டார்.

1ஆம் வாதியின் கணவரான நடராஜமூர்த்தி, 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எவ்வித சீர்வரிசையும், வரதட்சனையும் செய்ய முடியாது என மறுத்து கூறி வந்தார். 1ஆம் வாதியும், நடராஜமூர்த்தியும், திருமணத்திற்கு பின்னிட்டு 3 மாதங்கள் மட்டுமே 1ம் பிரதிவாதியின் பூர்வீக வீடான தாவா 1வது அயிட்ட சொத்தின் வீட்டில் கூட்டு குடும்பம் நடத்தி வந்தனர். அதன் பின்னிட்டு 1ம் வாதி அவரது பெற்றோர் ஊரான ஆதனூருக்கு சென்று, அங்கு தனியாக வீடு வாடகைக்கு எடுத்து குடியிருந்து வந்ததுடன், 1ம் பிரதிவாதியையும், அவரது மனைவி நல்லம்மாள் ஆகியோரையும் அனாதரவு செய்ததுடன், எவ்வித உதவியும் 1ம் வாதி பேச்சை கேட்டுக்கொண்டு நடராஜமூர்த்தி செய்ய மறுத்து விட்டார். இதனால் 1ம் பிரதிவாதி தனக்காகவும், தனது மனைவி நல்லம்மாள் ஜீவனத்திற்காகவும் சுயமாக சம்பாதித்து வைத்திருந்த தொகையில் தாவா 2 மற்றும் 3வது அயிட்ட சொத்துக்களை 1ம் பிரதிவாதி கிரையத்திற்கு பெற்றுள்ளார். தாவா 2 மற்றும் 3வது அயிட்ட சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதி சுய சம்பாத்திய சொத்துக்கள். இதில் பாகம் கோர வாதிகளுக்கோ 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கோ எவ்வித உரிமையும் இல்லை. இந்த வகையில் தாவா 2வது அயிட்ட சொத்தை 1ம் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் 02.12.2019 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் தன் சுயவிருப்பத்தின் பேரில் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியம் ஏற்படுத்தி கொடுத்த நாளிலிருந்து, 2 முதல் 4 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் தாவா 2வது அயிட்ட சொத்து உள்ளது.

தாவா 4வது அயிட்ட சொத்து 2 மற்றும் 3 பிரதிவாதிகள் அவர்களுடைய கணவரின் பூர்வீக சொத்துக்களிலிருந்தும், 3ம் பிரதிவாதியின் கணவர் அரசு உத்தியோகம் பார்த்த வந்த வகையில் கிடைக்கப்பெற்ற ஊதியம் மற்றும் 2ம் பிரதிவாதி ஊரில் சில முக்கியமானவர்களிடம் பெற்ற கடன் தொகையை கொண்டு 4ம் பிரதிவாதிக்கும் ஒரு நல்லது செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் மற்றும் 4ம் பிரதிவாதி பெயரில் கிரையம் பெற்றுள்ளார்கள். இதற்கு 1ம் பிரதிவாதி எவ்வித பண உதவியும் செய்யவில்லை. பூர்வீக சொத்தான வீட்டில் 2, 3

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:12:49 +0530

மற்றும் 4 பிரதிவாதிகள் பாகத்தை மறுப்பதற்காக 4வது அயிட்ட சொத்துக்கள் 2, 3, 4 பிரதிவாதிகள் பூர்வீக சொத்தை விற்ற வருமானத்திலிருந்து வாங்கியதாக பொய்யாகவும் அதில் பாகம் இருப்பதாக கற்பனையாகவும் வாதிகள் கூறியுள்ளார்கள். பூர்வீக சொத்தை விற்றதிலிருந்து ஒரு சிறு தொகையை கூட 2, 3, 4 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியிடமிருந்தோ இறந்த நடராஜமூர்த்தியிடமிருந்தோ பெற்றதில்லை. அதனால் தாவா 4வது அயிட்ட சொத்தை 5ம் பிரதிவாதிக்கு 07.9.2018ந் தேதி 2 முதல் 4 பிரதிவாதிகள் சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையத்திற்கு விற்பனை செய்துள்ளார்கள்.

1ம் பிரதிவாதி அவரது உடல்நிலையை கருத்தில் கொண்டு சொத்தில் ஏற்கனவே விற்பனை செய்தது போக மீதமுள்ள ஏக்.1.70 சென்ட் நிலத்தில் 2, 3, 4 சேரவேண்டிய பாகத்தில் 70 சென்ட் மட்டுமே தான்செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுக்க உத்தேசித்துள்ளதை தெரிந்து கொண்டு நடராஜமூர்த்தியை 1ம் வாதி தூண்டிவிட்டு, அவரது பாகத்தை 1ம் பிரதிவாதியிடம் பெற்று வரும்படி கூறியுள்ளார். இதனால் மேற்படி நடராஜமூர்த்தி தனது பாகத்தை எழுதி கொடுக்கும்படி 1ஆம் பிரதிவாதியிடமும், அவருடைய மனைவியிடமும் குடித்துவிட்டு அடித்து பலவகையில் கொடுமைப்படுத்தியுள்ளார். அப்போது 2ம் வாதியின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு 16.03.2012ம் தேதி தானசெட்டில்மென்ட் பத்திரம் மூலம் ஏக்.1.00 நிலத்தை 1ம் பிரதிவாதி, 2ம் வாதிக்கு எழுதி கொடுத்துள்ளார். மேற்படி 1 ஏக்கர் நிலத்தை பெற்றதுடன் 1ம் வாதியும் நடராஜமூர்த்தியும் சில கிரைய பத்திரம் மூலம் சில கோடி ரூபாய்க்கு விற்பனை செய்து மேற்படி தொகையை கொண்டு 1ம் வாதி அவரது சகோதரி ஆட்டோ ராணி என்பவருக்கு ரூ.5 லட்சம் செலவில் ஆடம்பரமாக திருமணம் செய்து வைத்துள்ளார். 1ம் வாதி அவரது பெற்றோர் ஊரான ஆதனூரில் முத்துசாமி மகன் கர்ணன் என்பவருடன் தவறான உறவை வைத்துக்கொண்டு ரூ.7 லட்சம் செலவு செய்து மேற்படி கர்ணன் என்பவருக்கு வீடு வாங்கியும், மேலும் ரூ.2 லட்சம் செலவில் அவருக்கு பெட்டி கடையும் வைத்து கொடுத்துள்ளார். இதை தெரிந்து கொண்ட 1 முதல் 4 பிரதிவாதிகள் சொத்தை விற்று யாருக்கோ ஏன் வீண் செலவு செய்கிறீர்கள் என்று, 1ம் வாதியிடமும், அவரது கணவரிடமும் கேட்டபோது 1ம் வாதியும்,

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:12:52 +0530

அவரது கணவரும், எங்களுடைய பாகத்தை விற்று கிடைத்த பணம் அதை எப்படி வேண்டுமானாலும் செலவு செய்வோம் உங்களுக்கு கேட்க உரிமையில்லை என்று கூறியுள்ளார்கள். இதனால் மனம் உடைந்த 1ம் பிரதிவாதி மனைவியும். 2 முதல் 4 பிரதிவாதிகள் தாயாருமான நல்லம்மாள் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாக இருந்தார். அப்போது இந்த 1ம் வாதியோ, அவரது கணவர் நடராஜமூர்த்தியோ ஒரு போதும் வந்து பார்த்ததில்லை. மேற்படி 1ம் பிரதிவாதியின் மனைவியும், கடந்த 15.4.2013ல் இறந்த போதும் 1ம் வாதியோ, அவரது கணவர் நடராஜமூர்த்தியோ இறந்த நல்லம்மாளை அடக்கம் செய்ய எவ்வித பண உதவியும் செய்யவில்லை. 2 முதல் 4 பிரதிவாதிகள் தான் 1ம் பிரதிவாதிக்கு பண உதவி செய்து அவரது தாயாரை நல்லடக்கம் செய்துள்ளார்கள்.

2, 3, 4 பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதி கொடுத்த 70 சென்ட் சொத்தில் சில பகுதிகளை 5ம் பிரதிவாதிக்கும். வேறு சிலருக்கும் சில கிரைய பத்திரம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார்கள். மேலும் 2ம் வாதியின் கார்டியன் கோதாவில் 2ம் வாதியின் தந்தை நடராஜமூர்த்தி மற்றும் 1ம் வாதி ஆகியோர்கள் 2ம் வாதிக்கு 1ம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் மூலம் ஏற்படுத்தி கொடுத்த சொத்தை பல நபருக்கு பல வீட்டு மனைகளாக விற்பனை செய்துள்ளார். மேற்படி நம்பர் வழக்கு பாக வழக்கு என்பதால் 1ம் வாதி கார்டியன் கோதாவில் விற்பனை செய்த சொத்தையும், கிரையத்தார்களையும் மேற்படி நம்பர் வழக்கில் சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை.

மேற்படி நடராஜமூர்த்திக்கு 1ம் வாதி மதுவை அதிகப்படியாக வாங்கி கொடுத்து மதுபோதைக்கு அடிமையாக்கி விட்டார். அதனால் அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டவுடன் அவரை கவனிக்காமல் அனாதரவு செய்து விட்டு, 1ம் வாதி அவரது பெற்றோர் ஊரான ஆதனூரில் 2, 3 வாதிகளுடன் தங்கிவிட்டார். இதனால் மேற்படி நடராஜமூர்த்தி யாருடைய ஆதரவும் இன்றி பெரம்பலூர் தனலெட்சுமி சீனிவாசன் மருத்துவமனையில் தனியாக சிகிச்சை எடுத்துக்கொண்டுள்ள நிலையில் அவர் இறந்து விட்டார். இறந்த நடராஜமூர்த்தியின் உடலை பெறக்கூட இந்த வாதிகள் மருத்துவமனைக்கு வரவில்லை. 2 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் அவர்களின்

PADMANABAN VENKATASAMY Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:12:56 +0530

கணவர்களே இறந்த நடராஜமூர்த்தியின் உடலை தாவா 1வது அயிட்ட சொத்தில் உள்ள பூர்வீக வீட்டிற்கு எடுத்து வந்து, வாதிகளுக்கு தகவல் கொடுத்து பிரதிவாதிகளின் செலவில் நடராஜமூர்த்திக்கு ஈமகிரியை சடங்குகள் அனைத்தும் செய்துள்ளார்கள். மேற்படி 2, 3 வாதிகளின் தநதை நடராஜமூர்த்தி இறந்த பிறகு மேற்படி நடராஜமூர்த்தி பெயரில் பெரம்பலூர் வெங்கடேசபுரம் எஸ்பிஐ கிளையில் 1ம் பிரதிவாதி செலுத்தியிருந்த நிரந்தர வைப்பு தொகை மற்றும் பெரம்பலூர் எல்ஐசி கிளையில் செலுத்தியிருந்த ஆயுள் காப்பீட்டு தொகை ஆகியவற்றை 1ம் வாதியே 2, 3 வாதிகளின் கார்டியன் கோதாவில் பெற்று மேற்படி தொகையை அவருடைய ஆசை நாயகனுக்கு கொடுத்து ஆடம்பரமாகவும், வீணாகவும் செலவு செய்துள்ளார். தற்போது வீண் செலவு செய்ய பணம் இல்லாததாலும் பேராசையாலும் மேற்படி கர்ணன் என்பவர் தூண்டுதலின் பேரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா 1வது அயிட்ட சொத்து பூர்வீக சொத்து என்பதால் தாவா 1வது அயிட்ட சொத்தில் வாதிகள் கோருவது போல் 1/5 பாகம் பிரித்து கொள்ள இந்த 1ம் பிரதிவாதிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. தாவா 2, 3 அயிட்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்பதால் 1ம் பிரதிவாதியை தவிர வேறு யாருக்கும் எவ்வித உரிமையும் பாத்தியமுமில்லை. அதில் பாகம் கோர வாதிக்கோ, 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கோ எவ்வித உரிமையுமில்லை. மேலும் தாவா 2வது அயிட்ட சொத்தை யாருடைய தூண்டுதலுமின்றி, வற்புறுத்தலுமின்றி 1ம் பிரதிவாதி தன் சுயவிருப்பத்தின் பேரில் இந்த 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தான்செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி, மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் பிரதிவாதிகள் கையெழுத்திட்டும், சாட்சிகள் கையெழுத்து செய்யப்பட்டும் மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் கடந்த 2.12.2019ந் தேதி பெரம்பலூர் சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு கொடுத்ததுடன் மேற்படி தான செட்டில்மெனட் பத்திரம் அன்றே நடைமுறைக்கு வந்துவிட்டது. மேற்படி 2.12.2019ந் தேதி முதல் வாதிகள் மற்றும் ஊரில் யாவரும் அறிய தாவா 2வது அயிட்ட சொத்தின் சுவாதீனத்தில் 2 முதல் 4 பிரதிவாதிகள் உள்ளார்கள். இதனை அனுசரித்து வருவாய்துறை தாவா 2வது அயிட்ட சொத்தில் 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:13:00 +0530

கூட்டு பட்டா வழங்கியுள்ளது. அதனால் தாவா 2, 3 அயிட்ட சொத்தில் வாதிகளுக்கு எவ்வித பாகமும் கிடைக்காது.

தாவா 4வது அயிட்ட சொத்துக்கள் 2 முதல் 4 பிரதிவாதிகள் அவர்களுடைய சுய சம்பாத்தியத்தில் கிரையத்திற்கு பெற்ற சொத்தாகும். அதனால் 2 முதல் 4 பிரதிவாதிகள் தாங்கள் கிரையம் மூலம் பெற்ற தாவா 4வது அயிட்ட சொத்தை 5ம் பிரதிவாதிக்கு கடந்த 7.9.2018 தேதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையத்திற்கு விற்பனை செய்துள்ளார்கள் அதனால் 5ம் பிரதிவாதி தாவா 4வது அயிட்ட சொத்தின் சுவாதீனத்தில் உள்ளார். உரிய விசாரணைக்கு பிறகு வருவாய்துறை தாவா 4வது சொத்திற்கு, 5ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கியுள்ளது. வாதிகளுக்கு தாவா 4வது அயிட்ட சொத்தில் எவ்வித பாகமும் கிடைக்காது. பாகம் கோருவது சரியில்லை. இந்த வழக்கு பாக வழக்கு என்பதால் சேர்க்க வேண்டிய நபர்களையும் சேர்க்க வேண்டிய சொத்துக்களையும் சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே வாதிகளின் வழக்கை 1 முதல் 4 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

<u>4. 5ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>

வழக்கில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளில் 5ம் பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர மற்ற சங்கதிகளை மறுத்தளிக்கிறார். தாவா 4வது அயிட்ட சொத்தை 2 முதல் 4 பிரதிவாதிகள் விற்பனை செய்ய இருப்பதாக 3ம் நபர் மூலம் 5ம் பிரதிவாதி தெரிந்துக்கொண்டு, 2 முதல் 4 பிரதிவாதிகளை 5ம் பிரதிவாதி அணுகி, தாவா 4வது அயிட்ட சொத்து விற்பனை குறித்து உறுதியாக தெரிந்து கொண்டார். இதுகுறித்து அக்கம் பக்கம் விசாரித்த வகையில் 2 முதல் 4 பிரதிவாதிகள் 4வது அயிட்ட சொத்தை 18.9.2006ந் தேதி நயினப்புடையார் குமாரர் நல்லதம்பி என்பவரிடம் கிரையத்திற்கு பெற்றார்கள் என்பது வில்லங்கம் பார்த்து தெரிந்துகொண்டதாகவும், சொத்தில் சட்டரீதியாக எவ்வித வில்லங்கமும் இல்லை என்பதையும் உறுதி செய்த பின்னர்தான், 5ம் பிரதிவாதி 07.9.2018ந் தேதி

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:13:03 +0530

கிரையத்திற்கு பெற்று சட்டப்படி பெரம்பலூர் சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார். மேற்படி கிரைய தேதியிலிருந்து நாளது தேதி வரை தாவா 4வது அயிட்ட சொத்தை 5ம் பிரதிவாதி யாருடைய இடையூறும் இன்றி அரசுக்கு செலுத்த வேண்டிய வரிவாய்தா செலுத்தியும், குடிநீர் கட்டணம், மின்சார கட்டணம், சொத்து வரி ஆகியவை செலுத்தியும் அமைதியாக ஊரில் யாவரும் அறிய இந்த வாதிகளும் அறிய அனுபவம் செய்து வருகிறார். இதனை அனுசரித்து வருவாய்துறை உரிய விசாரணைக்கு பிறகு 5ம் பிரதிவாதியின் பெயரில் 4வது அயிட்ட சொத்திற்கு பட்டாவும் வழங்கியுள்ளது. இந்நிலையில் வாதிகள் வழக்கறிஞர் மூலம் 29.11.2021ந் தேதியிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்று தாவா சொத்துக்களில் பாகம் கேட்டு அனுப்பியுள்ளார்கள். மேற்படி அறிவிப்பு 5ம் பிரதிவாதிக்கு கிடைக்க பெற்றவுடன் 1ஆம் வாதியிடம் 5ம் பிரதிவாதி தனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து கேட்ட போது, 1ம் பிரதிவாதி பெயரில் வாங்கிய சொத்துக்களை 2 முதல் 4 பிரதிவாதிகள் தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதி வாங்கி கொண்டார்கள் என்றும், மேலும் தாவா 1வது அயிட்ட சொத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் பாகம் கேட்கும் சூழ்நிலையில் உள்ளார்கள் என்றும், அதனால் 1வது அயிட்ட சொத்தில் எக்காலத்திலும், 1 முதல் 4 பிரதிவாதிகள் பாகம் கேட்டு விடக்கூடாது என்று மிரட்டுவதற்கும், 1ம்–பிரதிவாதி வசமுள்ள தொகையை பறிப்பதற்காகவும், 5ம் பிரதிவாதி ஆகிய உங்களுக்கும் சேர்த்து வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தால் தான் 1 முதல் 4 பிரதிவாதிகள் சமரசத்திற்கு வருவார்கள் என்றும், அதனால் நீங்கள் பயப்பட வேண்டாம் என்றும், 5ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும், 1ம் வாதி கூறியதை நம்பி எவ்வித பதில் வழக்கறிஞர் அறிவிப்பும் 5ம் பிரதிவாதி கொடுக்காமல் இருந்து விட்டார். இருந்தும் 2 முதல் 4 பிரதிவாதிகளை 5ம் பிரதிவாதி சந்தித்து வாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது குறித்து விவரம் கூறிய போது, 1 முதல் 4 பிரதிவாதிகள் உறவினர்கள் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் மூலம் வாதிகளிடம் சமரசம் பேசி கொண்டு இருப்பதாகவும், இந்த நிலையில் பதில் அறிவிப்பு கொடுத்தால் சமரச பேச்சு வார்த்தைக்கு குந்தகம் ஏற்படும் என்றும், அதனால் தற்போது வழக்கறிஞர் மூலம் பதில்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.30 19:13:07 +0530

அறிவிப்பு எதுவும் கொடுக்க வேண்டாம் என்று, 2 முதல் 4 பிரதிவாதிகள் கேட்டு கொண்டதனால் அவர்களின் நம்பகமான வார்த்தைகளை நம்பி மேற்படி வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிறகு பதில் அறிவிப்பு ஏதும் 5ம் பிரதிவாதி கொடுக்கவில்லை. பேச்சு வார்த்தையில் தீர்வு ஏற்படவில்லையென்றால் சட்டப்படியாக ஏற்படும் பிரச்சனைகளை தவிர்ப்பதற்காக கிராம பஞ்சாயத்தார்கள் கூறியதன் மூலம் கேவியட் மனுவை 5ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார். வேறு உள்நோக்கம் எதுவும் 5ம் பிரதிவாதிக்கு கிடையாது.

தாவா 4வது அயிட்ட சொத்து பொறுத்தவரை 2 முதல் 4 பிரதிவாதிகள் கிரையம் பெற்றவர்கள் என்ற வகையில் சட்டப்படியான உரிமையாளர்கள் என்பது குறித்தோ எவ்வித சட்டம் தொடர்புடைய வில்லங்கம் குறித்தோ எவ்வித பிரச்சனையும் இல்லை என்பதை உறுதி செய்த பின்னரே, சரியான பிரதிபிரயோஜனத்திற்கு 5ம் பிரதிவாதி கிரையத்திற்கு பெற்றுள்ளார். 4வது அயிட்ட சொத்து 2 முதல் 4 பிரதிவாதிகளின் சுயசம்பாத்திய வருமானத்தை கொண்டு வாங்கிய சொத்து என்பதாலும், 5ம் பிரதிவாதி கிரையம் பெற்றதனாலும், 4ம் அயிட்ட சொத்தை பொறுத்து வாதிகள் எவ்வித பாகமும் கோர உரிமையில்லை என்றும், ஒரு வேளை வாதிகளுக்கு 4வது அயிட்ட சொத்தில் பாகம் உள்ளது என நீதிமன்றம் முடிவு செய்தால், 4வது அயிட்ட சொத்தை பொறுத்து வாதிகளுக்கு சேர வேண்டிய பாகத்திற்கு மாற்றாக வாதிகளின் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளின் பூர்வீக சொத்துக்களில் பாகம் கேட்டு கொள்ள வேண்டியது, அதை பொறுத்து 5ம் பிரதிவாதிக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தானமாக கிடைத்த பூர்வீக 2வது அபிட்ட சொத்தில் 70 செண்ட் நிலத்தில் 14.9.2018 தேதி 10 செண்ட் நிலத்தை கிரையத்திற்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் விற்பனை செய்துள்ளார்கள். மேலும் மேற்படி 70 செண்ட் நிலத்தில் 20.06.2018ந் தேதி 11 செண்ட் நிலம் 2 முதல் 4 பிரதிவாதிகள் கிரையத்திற்கு விற்பனை செய்துள்ளார்கள். மேற்படி கிரையம் பெற்றவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால் இந்த வழக்கு சேர்க்க வேண்டிய நபர்களையும், சொத்துக்களையும், சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கானது

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.30 19:13:11 +0530

உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால் இந்த வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

5. 6ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:

எதிர்வழக்குரையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்று மறுக்கப்படுகிறது. 6ஆம் பிரதிவாதியின் அலுவலகம் அரசு அலுவலகம். பொதுவாக ஒரு பத்திரத்தை பதிவு செய்யும் பொழுது அந்த ஆவணத்தின் மூல ஆவணங்கள் மற்றும் பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்களை பரிசீலனை செய்து ஆவணப்பதிவு செய்வது சட்டப்படியான ஒன்று. நீதிமன்றத்தால் பத்திரப் பதிவு செய்யக்கூடாது என்று தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டால் மட்டுமே 6ஆம் பிரதிவாதியின் அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்ய முடியாது. எனவே 6ஆம் பிரதிவாதிக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

6. வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலித்து கீழ்க்கண்ட எழு–வினாக்கள் வனையப்பட்டுள்ளது.

1. வாதிகள் கோரும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கிடைக்கத்தக்–கதா?

2. வாதிகளுக்கு ஆதரவாக தாவா சொத்துக்களைப் பொறுத்து முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படவேண்டுமா?

3. வாதிகளுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?

7. வாதிகள் தரப்பில், 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ27 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில், பி.வா.சா1 முதல் பி.வா.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு,

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:13:15 +0530

பி.வா.சா.ஆ1 முதல் பி.வா.சா.ஆ28 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. எழுவினா எண் 2 :

1ஆம் பிரதிவாதியின் மகள்கள் 2 முதல் 4 பிரதிவாதிகள் என்பதும், 1ஆம் வாதியின் கணவரான இறந்துபோன நடராஜமூர்த்தி 1ஆம் பிரதிவாதியின் மகன் என்பதும், தாவா 2 மற்றும் 3 இலக்க சொத்துக்கள் 04.05.2006 மற்றும் 14.08.2006ஆம் தேதிகளில் 1ஆம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்பதும், 4வது இலக்க சொத்துக்கள் 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் 18.09.2006ஆம் தேதியில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்பதும், தாவா 1வது இலக்க சொத்து கூட்டுக் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்பதும், ஏற்கனவே இருந்த பூர்வீக சொத்துக்களை விற்று, அந்த வருமானத்தைக்கொண்டு 1வது இலக்க சொத்தில் வீடு கட்டப்பட்டுள்ளது என்பதும், பெரம்பலூர் தெற்கு கிராம சர்வே எண்.554/3 ஏக்.1.70–ல் 70 செண்ட் நிலத்தை 1ஆம் பிரதிவாதி 15.03.2012ஆம் தேதியில், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், அதேபோன்று, மேற்படி சர்வே எண்ணில் மீதமுள்ள 1.00 ஏக்கரை 1ஆம் பிரதிவாதி, அவருடைய பேரனான 2ஆம் வாதிக்கு, 2ஆம் வாதியின் தகப்பனாரான நடராஜமூர்த்தியை காப்பாளராக நியமித்து 16.03.2012ஆம் தேதியில் ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், அதன் அடிப்படையில், 1ஆம் வாதியின் கணவர் உயிருடன் இருந்தபோது அதன்ஒரு பகுதியை கிரையம் செய்துள்ளார் என்பதும், அதன் பின்னிட்டு 1ஆம் வாதியின் கணவர் இறந்தபின்னர், 1ஆம் வாதி காப்பாளர் என்ற முறையில் கிரையம் செய்துள்ளார் என்பதும், இவ்வழக்கின் சங்கதிகளில் மறுக்கப்படாத சங்கதிகளாக உள்ளது.

9. தாவா 1வது இலக்க சொத்து மட்டும் பொதுக்குடும்ப சொத்து என்று இருதரப்பினரும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாக உள்ளது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.30 19:13:19 +0530

10. 1ஆம் வாதி வா.சா.1ஆக சாட்சியம் அளித்துள்ளார். 1ஆம் வாதி தாக்கல் செய்துள்ள பிராதிலும், வா.சா.1 தன்னுடைய சாட்சியத்திலும், வா.சா.1ன் கணவரும் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளும், தாவா 1வது இலக்க சொத்து தவிர அவர்களுக்கு பாத்தியப்பட்ட இதர கூட்டுக்குடும்ப பூர்வீக சொத்துக்களை, கடந்த 2005 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் விற்று, அதிலிருந்து கிடைத்த பணத்தைக் கொண்டு 1ஆம் பிரதிவாதியின் பெயரில், 2வது இலக்க சொத்தை 04.05.2006ஆம் தேதியிலும், 3வது இலக்க சொத்தை 14.08.2006ஆம் தேதியிலும் கிரையம் பெற்றனர் என்றும், 4வது அயிட்ட சொத்துக்களை 2 முதல் 4 பிரதிவாதிகள் கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றும், 4வது அயிட்ட சொத்தில் வீடுகள் கட்டியும், சில வீடுகளில் குடியிருந்தும், சில வீடுகளை வாடகைக்கு விட்டும் அனுபவம் செய்து வருவதாகவும், அதன்படி 4வது அயிட்ட சொத்துக்கள் வா.சா.1ன் கணவர் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் அடங்கிய பொது கூட்டுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துகள் என்றும், தாவா 2வது இலக்க சொத்துக்களை 02.12.2019ஆம் தேதி 2 முதல் 4 பிரதிவாதிகள் 1ஆம் பிரதிவாதியை ஏமாற்றி மோசடியாக தான செட்டில்மெண்ட் பதிவு செய்யப்பட்டது என்றும், தாவா 4வது இலக்க சொத்தை 2 முதல் 4 பிரதிவாதிகள், 5ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 1/5 பாகம் உள்ளது என்றும் வாதிகள் தரப்பில் கூறியுள்ளார்கள்.

11. பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி வாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் குறிப்பாகவும், கடுமையாகவும் மறுக்கப்படுகிறது. ஏற்கனவே 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் 1ஆம் வாதியின் கணவர் அடங்கிய கூட்டுக்குடும்ப பூர்வீக சொத்துக்களை விற்று, அதன் பணத்தைக்கொண்டு தாவா 1வது இலக்க சொத்துக்களில் வீடு கட்டப்பட்டுள்ளது என்றும், தாவா 2 மற்றும் 3 இலக்க சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதிகக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா 4வது அயிட்ட சொத்துக்கள் 2 முதல் 4 பிரதிவாதிகளின் சொந்த வருமானத்தைக் கொண்டும் மற்றும் அவர்களின் கணவரின் வருமானத்தைக்கொண்டும், அவர்களின்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.30 19:13:23 +0530

பெயரில் கிரையம் பெற்ற கிரையச் சொத்துக்கள் என்றும், தாவா 4வது அயிட்ட சொத்துக்களை 5ஆம் பிரதிவாதிக்கு விற்றுள்ளதாகவும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. 3ஆம் பிரதிவாதி பி.சா.1ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பி.சா.1ம் மேற்கூறிய சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.1ன் சாட்சியத்தை அனுசரித்து பி.சா.2 மற்றும் பி.சா.3ம் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

12. வாதிகள் தரப்பில் குறிப்பிடும் தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்கள் ஏற்கனவே இருந்த பூர்வீக சொத்துக்களான கூட்டுக்குடும்ப சொத்துக்களை விற்று அதன் மூலம் கிடைத்த பணத்தைக்கொண்டுதான், 1ஆம் பிரதிவாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று குறிப்பிட்டு கட்சி செய்திருந்தாலும், அதற்கான தெளிவான மற்றும் குறிப்பான சாட்சியங்கள் எதுவும் வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும் யாருக்கு எப்படி கிரையம் கொடுத்தார்கள் என்பது குறித்தும், அந்த பணத்திலிருந்து எவ்வளவு ரூபாய் கொடுத்து தாவா 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களை 1ஆம் பிரதிவாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் கிரையம் பெற்று வாங்கினார்கள் என்று வாதிகள் தரப்பில் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளத்தக்க சாட்சிகள் எதுவும் முன்னிலைப்படுத்தப் படவில்லை. அதே சமயத்தில், வாதிகள் குறிப்பிடுவது போன்று, 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களை வாதிகள் உட்பட கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதற்கும் எவ்வித சாட்சியமும், வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும் வா.சா.1 அவருடைய குறுக்கு விசாரணையில், தன் மாமனாரான 1ஆம் பிரதிவாதி பூர்வீக சொத்துக்களை விற்ற பணத்தை கொண்டு தனது கணவர் பெயரில் வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்துள்ளார் என்று தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார். வா.சா.1ன் மகன், 2ஆம் வாதி பெயரில் 1ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் மற்றும் 1ஆம் பிரதிவாதி, 2ஆம் வாதிக்கு எழுதிக்கொடுத்த பிழைதிருத்தல் பத்திரம் முறையே வா.சா.18 மற்றும் வா.சா.19ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தை 1ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ளார் என்று வா.சா.1 ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி ஆவணத்தை

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:13:27 +0530

ஒப்புக்கொண்டு, 1ஆம் வாதியின் கணவர் உயிருடன் இருக்கும்போது, சொத்தில் ஒரு பகுதியை விற்றுவிட்டார் என்றும், அதன் பின்னிட்டு அவர் இறந்தபின்னர் ஒரு பகுதியை வா.சா.1 விற்றுவிட்டதாகவும் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், 1ஆம் பிரதிவாதி 2ம் வாதியின் பெயருக்கு எழுதிவைத்த சொத்துக்களை இவ்வழக்கில் தாவா சொத்துக்களாக சேர்க்காமல் மற்ற சொத்துக்களை மட்டும் 1ஆம் பிரதிவாதியின் பெயரில் வாங்கிய கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்று கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கவகையில் இல்லை. மேற்படி சொத்தை இவ்வழக்கில் தாவா சொத்தாக காட்டப்படவும் இல்லை. மேலும் 1ஆம் பிரதிவாதி மாடுகள் வைத்திருந்தும், லோடு மேன் ஆக வேலை பார்த்தும் சொத்துக்களை கிரையம் வாங்கியதாக கூறுவது, இயற்கையாகவும், இந்நீதிமன்றம் நம்பத்தகுந்ததாகவும் உள்ளது.

13. பெண்பாலாக உள்ள 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் 4வது இலக்க சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டுள்ளது, பொது கூட்டுக்குடும்ப சொத்துக்கள் விற்ற பணத்திலிருந்துதான் வாங்கப்பட்டது என்று வாதிகள் தரப்பில் ஒரு வாதம் இருந்தாலும், சொத்துக்களின் தன்மை, நிலைமை குறித்து, ஏற்கனவே ஏற்பட்ட ஆவணங்கள் குறித்து வ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்.

> " பூர்வீக நிலத்தில் பங்கு கேட்டுதான் வழக்கு போட்டுள்ளேன். என் மாமனார் 2, 3, 4 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய சொத்தில் பாகம் கேட்கிறேன். என் கணவர் நடராஜமூர்த்தி 1ம் பிரதிவாதியின் மகன். எனக்கும் நடராஜமூர்த்திக்கும் 2006 ல் திருமணம் நடந்தது. பூர்வீக சொத்து மொத்தம் 4 ஏக்கர் 20 செண்ட் ஆகும். என் திருமணத்திற்கு முன்பாகவே 2 1/2 ஏக்கர் விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகளுக்கு என்னுடைய திருமணத்திற்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். அவர்களது திருமணத்திற்கு என்ன சீர்வரிசை செய்தார் என்று எனக்கு தெரியாது. மீதமுள்ளது 1 ஏக்கர் 70 செண்ட் என்றால் சரிதான். அதில் 1/5 பாகம் 34 செண்ட் என்றால் சரிதான்.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur, Date: 2026.03.30 19:13:32 +0530

16.03.2012 ல் 1 ஏக்கர் 70 செண்ட்–ல் என்னுடைய மகனுக்கு 1 ஏக்கரை தானசெட்டில்மெண்டாக 1–ம் பிரதிவாதி எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மீதமுள்ள 70 செண்ட்டை 2, 3, 4 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்டாக என் மாமனார் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். என் மாமனார் பூர்வீக சொத்தில் பாகம் ஒதுக்கி கொள்ளவில்லை. பூர்வீக சொத்தை விற்றதில் என் மாமனார் ரூ.2 இலட்சம் என் கணவர் பெயரில் வங்கி நிரந்தர வைப்பீடு செய்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய திருமணத்தின் போது பூர்வீக இடத்தில் புதியதாக வீடு கட்டப்பட்டிருந்தது. 26.09.2014–ல் நடேசன் மகன் செல்லப்பிள்ளை என்பவரிடம் என் கணவர், என் மகன் பேரில் இருந்த 1 ஏக்கர் நிலத்தில் 20 செண்ட் விற்றார் என்றால், எவ்வளவு விற்றார் என்று தெரியவில்லை. ஆனால் 1 பகுதி விற்றுவிட்டார். 06.07.2020–ல் நான் 20 செண்ட்டை மனோகர் என்பவருக்கு விற்றுவிட்டேன் என்றால் 2019 ல் விற்றேன். 3ஆம் பிரதிவாதியின் கணவர் அரசு ஊழியர் என்றால் சரிதான். 2–ம் பிரதிவாதி செல்லம் கணவர் வீட்டிலும் நிறைய சொத்து பத்துகள் இருந்தன என்றால் சரிதான். 2, 3 அயிட்ட சொத்துக்களை கிரையம் வாங்கும்போது என் கணவர் உயிருடன் தான் இருந்தார். பூர்வீக சொத்துக்களில் இருந்து 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களை கிரையம் வாங்கியிருந்தால் என் கணவர் ஆட்சேபணை செய்திருப்பார் என்றும், அவ்வாறு வாங்காததால் தான் ஆட்சேபணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல."

வாசா.1 தனது குறுக்கு விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை பரிசீலனை செய்து பார்க்கும்போது, 1 முதல் 4 பிரதிவாதிகள் குறிப்பிடுவது போன்று 1ஆம் பிரதிவாதி, 2

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.30 19:13:37 +0530

மற்றும் 3 இலக்க சொத்துக்களை தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்தார் என்றும், 1ஆம் பிரதிவாதி, 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும், 2ஆம் வாதிக்கும், தான செட்டில்மெண்ட்–ஆக எழுதிக்கொடுத்தவை 1ஆம் பிரதிவாதியின் சொத்துக்கள் என்று வாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளநிலையில், அவை கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்று வாதிகள் கோருவது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. 2 முதல் 4 பிரதிவாதிகள் பெண்பாலாக உள்ள நிலையில், அவர்களுடைய கணவர்களின் வசதி, வேலை மற்றும் வருமானம் பற்றி வா.சா.1 ஒப்புக்கொண்டுள்ள நிலையில், மேலும் பெண்பால் ஆக உள்ள 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அவர்களின் திருமணத்திற்கு பின்பு, 4வது இலக்க சொத்து அவர்களின் நன்மைக்காக வாங்கப்பட்டு அவர்களுக்கு பாத்தியமாகி, அந்த அடிப்படையில் 5ஆம் பிரதிவாதிக்கு அவர்கள் கிரையம் கொடுப்பதற்கு உரிமை உள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, 4வது இலக்க சொத்து 2 முதல் 4 பிரதிவாதிகளின் தனிப்பட்ட சொத்து என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

14. வா.சா.1 அவருடைய நிரூபண வாக்குமூலத்தில், 1ஆம் பிரதிவாதியும், அவரது வாரிசுகளும் பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்களான நிலங்களை கடந்த 2005 மற்றும் 2006–ல் விற்பனை செய்து அதிலிருந்து கிடைக்கப்பெற்ற தொகையை கொண்டு, மேலும் சில சொத்துக்களை 1ஆம் பிரதிவாதி, அவரது மகள்களான 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் கிரையம் வாங்கி வைத்துள்ளார் என்றும், அவைகளைப் பொறுத்த சரியான மற்றும் முழுமையான தகவல் தற்போதுவரை தங்களுக்கு கிடைக்கவில்லை என்றும், அதனால் அவைகளை பொறுத்த சரியான மற்றும் முழுமையான தகவல் கிடைத்ததும், அவைகள் இவ்வழக்கில் பின்னிட்டு சேர்த்துக்கொள்ள தாங்கள் தங்களது உரிமையை இதன்மூலம் தக்கவைத்துக்கொள்கிறோம் என்று கூறியுள்ளார். இவ்வழக்கானது சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கு விசாரணை முடியும்வரை வாதிகளால் அதுகுறித்து, விவரம் எதுவும் கூறப்படவில்லை. மேலும் வா.சா.1க்கு 2006ஆம் ஆண்டில்தான், 1ஆம் பிரதிவாதியின் மகனுடன் திருமணம்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:13:41 +0530

நடந்துள்ள நிலையில், அதற்கு முன்பு குடும்ப விவரங்கள், குடும்ப சொத்துக்களின் நிலைக் குறித்தும், எவ்வாறு விற்கப்பட்டது என்பது குறித்தும் வா.சா.1க்கு தெரிய வாய்ப்பில்லை. மேலும், விவரம் தெரிந்த நபர்கள் யாரும் வாதிகள் தரப்பில் சாட்சியாக விசாரிக்கபடவில்லை. இந்த சூழ்நிலையில் வாதிகள் சொத்துக்கள் குறித்து தெளிவான விவரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி அனைத்து சங்கதிகளைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், வாதிகளுக்கு தாவா 1வது இலக்கச் சொத்தில் 1/5 பங்கு மட்டுமே உரிமை உள்ளது என்று எழுவினா எண்.2–க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

15. எழுவினா எண்– 1:

வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதில் தாவா சொத்துக்களை, பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகள் 6ஆம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்யாமல் இருக்க 6ஆம் பிரதிவாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டுமென்று கோரியுள்ளார். இவ்வழக்கில் 6ஆம் பிரதிவாதியாக, பெரம்பலூர் சார் பதிவாளர் சேர்க்கப்பட்டுள்ளார். 6ஆம் பிரதிவாதியின் சட்டப்படியான பணி என்பது முறையாக பத்திரம் பதிவு செய்வதற்கு, உரிய முத்திரைத்தாள் கட்டணம் செலுத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், தரப்பினர்கள் பதிவு செய்யக்கோரும் ஆவணங்களை பதிவு செய்ய வேண்டிய கடமையும், பொறுப்பும் 6ஆம் பிரதிவாதிக்கு உள்ள நிலையில், அவருடைய சட்டப்படியான கடமை மற்றும் பணியை செய்ய தடுக்கும் வகையில், வாதிகள் தரப்பில் கோரிய பரிகாரமான நிரந்தர உறுத்துக்கட்டளையை வழங்க இயலாது என்று எழுவினா எண்.1–க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.30 19:13:46 +0530

<u>16.　　எழுவினா எண்.3:</u>

முந்தைய எழுவினாக்களுக்கு தீர்வு கண்டுள்ளபடி வாதிகளுக்கு இவ்வ–ழக்கில் வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என இந்த எழுவினாவிற்கு இந்த நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

17. இறுதியாக, இவ்வழக்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

(அ) தாவா 1வது இலக்கச் சொத்தில் மட்டும் வாதிகளுக்கு 1/5 பாகம் கிடைக்கத்தக்கது என்று வாதிகளுக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து உத்தரவிடுகிறது. அதேசமயத்தில் தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் மேற்படி சொத்துக்களை பொறுத்து இந்நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்கிறது.

(ஆ) இறுதிநிலை தீர்ப்பாணை தாவா 1வது இலக்கச் சொத்துக்களை பொறுத்து தனி நடவடிக்கைகளில் நிறைவேற்றப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

(இ) நிரந்தர தடையுறுத்துக்கட்டளைக் குறித்து 6ஆம் பிரதிவாதிக்கு எதிராக வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் அதை பொறுத்து இந்நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இருதரப்பினர்களின் உறவுமுறை மற்றும் வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டு, அவரவர்கள் செலவுத்தொகையை அவரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III க்கு சொல்லப்பட்டு, அவரால் ஒலி வடிவில் குறிப்பு எடுக்கப்பட்டு பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் ஆகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.30 19:13:51 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
பெரம்பலூர்.

I. வாதிகள் தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.1 | திருமதி. மகேஸ்வரி. |

II. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | வாதிகள் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளின் உறவுமுறை காட்டும் வம்சாவழி பட்டியல். |
| 2 | வா.சா.ஆ.2 | 1ஆம் பிரதிவாதியின் மனைவி நல்லம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ். |
| 3 | வா.சா.ஆ.3 | 1–ம் பிரதிவாதியின் மகன் நடராஜமூர்த்தியின் இறப்பு சான்றிதழ். |
| 4 | வா.சா.ஆ.4 | 1–ம் பிரதிவாதியின் மகன் நடராஜமூர்த்தியின் வாரிசு சான்றிதழ் நகல். |
| 5 | வா.சா.ஆ.5 | 1–ம் பிரதிவாதியின் பெரியலுள்ள மனைவரி பட்டா எண்.1404. |
| 6 | வா.சா.ஆ.6 | தாவா 1–வது அயிட்ட சொத்தில் 2006–ல் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி அளித்த உத்தரவு. |
| 7 | வா.சா.ஆ.7 வரிசை | தாவா 1–வது அயிட்ட சொத்திற்கு செலுத்திய வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை 2). |
| 8 | வா.சா.ஆ.8 | தாவா 1–வது அயிட்ட சொத்திற்கு செலுத்திய மின்கட்டண ரசீது கணினி நகல். |
| 9 | வா.சா.ஆ.9 வரிசை | தாவா 1–வது அயிட்ட சொத்தில் வாதிகள் குடியிருந்து வருவதற்கான ஆதார் அட்டைகள் உண்மை நகல் (எண்ணிக்கை –3) |
| 10 | வா.சா.ஆ.10 | பொதுகுடும்ப சொத்துக்களை 2005 மற்றும் 2006–ல் விற்பனை செய்துள்ளதற்கான வில்லங்க சான்று நகல். |
| 11 | வா.சா.ஆ.11 | தாவா 2–வது அயிட்ட சொத்தை 1–ம் பிரதிவாதி கடந்த 04.05.2006–ம் தேதி கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திரம் நகல். |
| 12 | வா.சா.ஆ.12 | தாவா 3–வது அயிட்ட சொத்தை 1–ம் பிரதிவாதி கடந்த 14.08.2006–ம் தேதி கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திரம் நகல். |
| 13 | வா.சா.ஆ.13 | தாவா 3–வது அயிட்ட சொத்திற்கு 1–ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட மனைவரி தோராய பட்டா எண்.1099. |

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:13:58 +0530

| | | |
|---|---|---|
| 14 | வா.சா.ஆ.14 | தாவா 4–வது அயிட்ட சொத்தை 2ஆம் பிரதிவாதியின் பெயரில் கடந்த 18.09.2006–ம் தேதி கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திரம் நகல். |
| 15 | வா.சா.ஆ.15 | தாவா 4–வது அயிட்ட சொத்தை 3ஆம் பிரதிவாதியின் பெயரில் கடந்த 18.09.2006–ம் தேதி கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திரம் நகல். |
| 16 | வா.சா.ஆ.16 | தாவா 4–வது அயிட்ட சொத்தை 4ஆம் பிரதிவாதியின் பெயரில் கடந்த 18.09.2006–ம் தேதி கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திரம் நகல். |
| 17 | வா.சா.ஆ.17 | 1–ம் பிரதிவாதி, 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு கடந்த 15.03.2012–ல் எழுதிகொடுத்ததற்கான தான செட்டில்மெண்ட் பத்திரம் |
| 18 | வா.சா.ஆ.18 | 1–ம் பிரதிவாதி, இளவரான 2–ம் வாதிக்கு கடந்த 16.03.2012–ல் எழுதிக் கொடுத்ததற்கான தானசெட்டில்மெண்ட் புத்திரம் |
| 19 | வா.சா.ஆ.19 | 2–ம் வாதியின் பெயரியல் ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் புத்திரத்தை கடந்த 28.04.2014–ம் தேதி பிழை திருத்தம் செய்த பத்திரம் நகல் |
| 20 | வா.சா.ஆ.20 | தாவா 4–வது அயிட்ட சொத்தை 2 முதல் 4 பிரதிவாதிகள் 5–ம் பிரதிவாதிக்கு கடந்த 07.09.2018–ல் விற்பனை செய்துள்ளதற்கான கிரைய ஆவணம் நகல். |
| 21 | வா.சா.ஆ.21 | 1–ம் பிரதிவாதி, 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு கடந்த 02.12.2019–ல் எழுதிக் கொடுத்ததற்கான தானசெட்டில்மெண்ட் பத்திரம் நகல். |
| 22 | வா.சா.ஆ.22 | தாவா 2வது அயிட்ட சொத்திற்கு 1 முதல் 4 பிரதிவாதிகளின் பெயரில் ஏற்பட்ட கூட் பட்டா எண்.1040. |
| 23 | வா.சா.ஆ.23 | 29.11.2021ஆம் தேதி வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| 24 | வா.சா.ஆ.24 வரிசை | ஒப்புகை அட்டைகள் (எண்ணிக்கைகள் 6) |
| 25 | வா.சா.ஆ.25 | 1 முதல் 5 பிரதிவாதிகள் 1ஆம் வாதிக்கு அனுப்பிய கேவியட் மனு அலுவலக நகல். |
| 26 | வா.சா.ஆ.26 | 1ஆம் பிரதிவாதியின் தந்தை பெயரில் யுடிஆர்க்கு முன்பு ஏற்பட்ட பழைய சிட்டா. |

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge.
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.30 19:14:02 +0530

| | | |
|---|---|---|
| 27 | வா.சா.ஆ.27 | 1ஆம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்ட 1395–ம் பசலிக்கான யுடிஆர்க்கு முன்பு ஏற்பட்ட அடங்கல். |

III. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| 1 | பி.வா.சா.1 | திருமதி.சீதாலட்சுமி. |
| 2 | பி.வா.சா.2 | திருமதி.ஜெயலட்சுமி. |
| 3 | பி.வா.சா.3 | திரு.ராஜு. |

IV. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :

| | | |
|---|---|---|
| 1 | பி.வா.சா.ஆ.1 | தாவா 1வது அயிட்ட சொத்து குறித்து 1ஆம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட நத்தம் நிலவரி திட்டம் பட்டா எண்.1404. |
| 2 | பி.வா.சா.ஆ.2 | 19.09.1981–ஆம் தேதியில் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பெரம்பலூர் தெற்கு சர்வே எண் 501/11 நிலத்தை பரிவர்த்தனை மூலம் கொடுத்து பெரம்பலூர் தெற்கு சர்வே எண் 554/6 பெற்றதற்கான பரிவர்த்தனை பத்திரம் நகல். |
| 3 | பி.வா.சா.ஆ.3 | 1ம் பிரதிவாதி அய்யாக்கன்னு மனைவி வள்ளியம்மாள் என்பவரிடம் பெரம்பலூர் தெற்கு சர்வே எண் 554/6D 04.03.1987ல் கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திரம் நகல். |
| 4 | பி.வா.சா.ஆ.4 | பெரம்பலூர் S.F. No. 554/6D– ன் 0.65 சென்ட்–ஐ மனோகரன் என்பவருக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் 1ம் வாதியின் கணவரும் 25.07.2005ஆம் தேதியில் விற்பனை செய்த கிரையப்பத்திரம். |
| 5 | பி.வா.சா.ஆ.5 | 1ம் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 15.03.2012ஆம் தேதியில் ஏற்படுத்தி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் நகல். |
| 6 | பி.வா.சா.ஆ.6 | 2ம் வாதியின் தந்தையை காப்பாளராக நியமித்து, 2ஆம் வாதிக்கு, 1ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் நகல். |
| 7 | பி.வா.சா.ஆ.7 | 28.04.2014ஆம் தேதியிட்ட 2ம் வாதியின் பெயரை திருத்திய 1ம் பிரதிவாதி எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் நகல். (பிழைதிருத்தல் பத்திரம்) |
| 8 | பி.வா.சா.ஆ.8 | 26.09.2014ந் தேதியில் 1ம் வாதியின் கணவர் 2ஆம் |

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.30 19:14:07 +0530

| | | |
|---|---|---|
| | | வாதியின் பெயரில் உள்ள 0.20 சென்ட்–ஐ ஒரு செல்லப்பிள்ளை என்பவருக்கு விற்பனை செய்த கிரையபத்திரம் நகல். |
| 9 | பி.வா.சா.ஆ.9 | 06.06.2016ந் தேதியில் 1ம் வாதியின் கணவர் 2ஆம் வாதியின் பெயரில் உள்ள 0.20 சென்ட்–ஐ ஒரு செல்லப்பிள்ளை என்பவருக்கு விற்பனை செய்த கிரையபத்திரம் நகல். |
| 10 | பி.வா.சா.ஆ.10 | 12.03.2018 ஆம் தேதியில், 1ஆம் வாதியின் கணவர் 2ஆம் வாதியின் பெயரில் உள்ள 40 செண்ட்–ஐ ஒரு பாஸ்கரன் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரையபத்திரம் நகல். |
| 11 | பி.வா.சா.ஆ.11 | 06.06.2020ஆம் தேதியில் 1ம் வாதி, 2ம் வாதியின் பெயரில் உள்ள 20 செண்ட்–ஐ மனோகரன் என்பவரின் பவர் ஏஜெண்ட் சின்னசாமி என்பவருக்கு எழுதிக் கொடுத்த கிரையபத்திரம் நகல். |
| 12 | பி.வா.சா.ஆ.12 | 2 முதல் 4 பிரதிவாதிகள் 20.06.2018ஆம் தேதி T.தமிழ்செல்வன் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரையபத்திரம் நகல். |
| 13 | பி.வா.சா.ஆ.13 | 14.09.2018ஆம் தேதியில் 2 முதல் 4 பிரதிவாதிகள் பி.விஜயலெட்சுமி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரையபத்திரம் நகல். |
| 14 | பி.வா.சா.ஆ.14 | 19.11.2020ஆம் தேதியில் 2 முதல் 4 பிரதிவாதிகள் 15.03.2012ந் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் சொத்தில் கிரையம் கொடுத்தது போக மீதமுள்ள 49 செண்ட் நிலத்தை பாகப்பிரிவினை செய்துக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் நகல். |
| 15 | பி.வா.சா.ஆ.15 | 04.05.2006ஆம் தேதியில் தாவா 2வது அயிட்ட சொத்தை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரையபத்திரம் நகல். |
| 16 | பி.வா.சா.ஆ.16 | 14.08.2006ஆம் தேதியில் தாவா 3வது அயிட்ட சொத்தை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரையபத்திரம் நகல். |
| 17 | பி.வா.சா.ஆ.17 | 02.12.2019ஆம் தேதியில் தாவா 2 மற்றும் 3வது அயிட்ட சொத்துக்களை, 1ம் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதிகொடுத்த தான செட்டில் மெண்ட் பத்திரம் நகல். |
| 18 | பி.வா.சா.ஆ.18 | 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா எண்.1040 கணினி நகல். |

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.30 19:14:11 +0530

| | | |
|---|---|---|
| 19 | பி.வா.சா.ஆ.19 | 18.09.2006ஆம் தேதியில் தாவா 4வது அயிட்ட சொத்தை 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் நகல். . |
| 20 | பி.வா.சா.ஆ.20 | 18.09.2006ஆம் தேதியில் 4வது அயிட்ட சொத்தை 3ஆம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் நகல். . |
| 21 | பி.வா.சா.ஆ.21 | 18.09.2006ல் தாவா 4வது அயிட்ட சொத்தை 4ஆம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரையப்பத்திரம். |
| 22 | பி.வா.சா.ஆ.22 | 28.12.1984ஆம் தேதியில் ஒரு நயினப்புடையார் என்பவருக்கு ஏற்பட்ட கிரையப்பத்திரம் நகல். |
| 23 | பி.வா.சா.ஆ.23 | 07.09.2018ஆம் தேதியில் தாவா 4வது அயிட்ட சொத்தை 2 முதல் 4 பிரதிவாதிகள் 5ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த கிரையப்பத்திரம். |
| 24 | பி.வா.சா.ஆ.24 வரிசை | 5ஆம் பிரதிவாதியின் பெயரிலுள்ள வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை 4) |
| 25 | பி.வா.சா.ஆ.25 வரிசை | 5ஆம் பிரதிவாதியின் பெயரிலுள்ள குடிநீர் வரி ரசீதுகள் (எண்ணிக்கை 4) |
| 26 | பி.வா.சா.ஆ.26 வரிசை | 5ஆம் பிரதிவாதியின் பெயரிலுள்ள பாதாள கழிவுநீர் வரி ரசீதுகள் (எண்ணிக்கை 4) |
| 27 | பி.வா.சா.ஆ.27 வரிசை | 5ஆம் பிரதிவாதியின் பெயரிலுள்ள மின்கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை 6) |
| 28 | பி.வா.சா.ஆ.28 | 5ஆம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா எண்.1540 கணினி நகல். |

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.30 19:14:15 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

பெரம்பலூர்.

மாவட்ட நீதிமன்றம்,
பெரம்பலூர்.

வரைவு/தெளிவு தீர்ப்புரை
அசல் வழக்கு எண்.4/2022
தேதி: 30.03.2026.